Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
O.S. No. 192/2022

| | | |
|---|---|---|
| Name | : பிரமிளா சரோஜினி | **P.W.1** |
| Father/Husband Name | :மோகன் | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 15-07-2024 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2024

**குறுக்கு வீசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரங்களுக்கு சர்வே எண். 327/2 குறிப்பிடவில்லை என்றால் தவறுதலாக குறிப்பிட்டு இருக்கும் அந்த ஆவணத்தின் முதல் பக்கத்தில் சர்வே எஙண. 327/2 என குறிப்பிடபட்டுள்ளது. வா.சா. ஆ.1 ஆவணம் குறித்து பிழை திருத்தம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெறும்போது வா.சா.ஆ. 1 ஆவணத்தை பார்த்து வாங்கினேனா என்றால் ஆமாம். சர்வே எண் தவறுதலாக உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அது பிரிண்ட் மிஸ்டேக். நான் பிழை திருத்தம் செய்ய நான் நினைக்கவில்லையா என்றால் இந்த விவரங்கள் என் கணவருக்கு தான் தெரியும்.

2. வா.சா.ஆ, 1 ஆவணம் ஆள் மாறாட்டம் செய்யப்பட்டு ஏற்படத்தப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து திருப்போருர் சார்பதிவாளர் என்லைக்குட்டபடடத என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.1 ஆவணம் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் போலியான ஆவணம் என்பதால் தான் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில்7 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்யத பதிலுரையை நான் படித்து பார்க்கவில்லை. முத்தன் மகன் செல்வராஜ்க்கு அஞ்சாலை மனைவி முனியாம்மாள் நவநீதம் என்ற மகள்களும் ஜெனாதனன் ரவி என்ற மகன்களும் உள்ளார் என்ற விவரங்கள் எனக்கு தெரியது. ஜெனாத்தனன் இறந்து விட்டநர் என்ளுறும் அவருக்கு சீலா என்ற மனைவியும் ஜனனி ரஜினி சாத்தினி ரோஸினி என்ற மகள்களும் உள்ளார் என்ற விவரம் எனக்கு

தெரியாது.மேற்படி நபர்கள் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல நாங்கள் தான் கடந்த 30 வருடங்களா அனுபவித்து வருகிறோம்.

3. வா.சா.ஆ.5 ஆவணம் கிருஷ்ணசாமி மகன் பரந்தாமன் முத்தன் மகன் செல்வராஜ் பெயரில் உள்ளது. 20/12/2006 ல் வா.சா.ஆ.5 ஆவணம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றது 05/02/2007 வருடம் அதற்கு முன்னரே கூட்டு சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராமண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் வழக்கு சொத்து குறித்து சட்ட ஆலோசனை பெற்றேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், என்ன ஆவணங்கள் சரிப்பாக்கப்பட்டது என்றால் சிட்டா அடங்கல் பார்த்தோம். சிட்டா அடங்கல் கூட்டா இருந்ததா தனித்தனியாக இருந்ததா என்றால் கூட்டாக தான் இருந்தது. கூட்டாக இருந்த அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

4. ஆ பதிவேடை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.நான் எந்த விதமான ஆவணத்தையும் பார்க்காமல் என் கணவர் சொல்லிதான் வா.சா.ஆ 2 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 15/04/2017 அன்று யார் அத்துமீறி உள்ளே நுழைந்தார் என்றால் செல்வராஜ் மகன் அவர் பெயர் எனக்கு தெரியாது அவரை நான் பார்த்தது இல்லை. இந்த வழக்கின் பிரிதிவாதி பெயர் ரவி. அவரை நான் பார்த்தது இல்லை என்றால் அந்த சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இருந்தேன். நான் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படம் புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லைநான் புகார் ஏதும் கொடுக்கதால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்கு சொதது சர்வே எண். 327/2 பிரிதிவாதியும் அவருடைய சகோதரர் சகோதரிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கூட்டு சிட்டாவாக உள்ளதை தனி சிட்டாவாக மாறியதற்கு முறையான பதிவாளர் அலுவலகத்தில் உத்தரவு ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு சொத்து என்னுடையது தான் என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.விளம்புகை பரிகாரம் கேட்கதால் இந்த வழக்கு நிலையக்க தக்கது இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குறித்து இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை

தாக்கல் செய்வதற்கு எந்த முகாந்திரம் இ,ல்லை என்று சொன்னால் சரியல்ல. போலியாக தயாரித்த ஆவணத்தை வைத்து பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள சர்வே எண். பிரிதிவாதிக்கும் அவருடைய சகோதரர் சகோதரிக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் எப்போதும் அனுபவிக்க வில்லை என்றும் அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சொன்னதுபோல எதிரிடை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- N.Anupriya, 15.07.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.